விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 புரட்டாதி 06 வெள்ளிக்கிழமை (22.09.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 268

## இலங்கை நிலைமை குறித்து இந்திய அரசுடன் பேசுவது தமிழரின் தார்மீகக் கடமை



### தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டு

இலங்கை நிலைமைகளை இந்திய அரசுக்கு எடுத்துரைப்பதென்பது எமது தார்மீகக்கடமையாக நாம் நினைக்கின்றோம் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரில் இருந்து வெளிவரும் தமிழ் முரசு நாளிதழுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். *(04 ஆம் பக்கம் பார்க்க)*

## பளையில் விமானக் குண்டுவீச்சு நாகர்கோயில் பகுதியில் மோதல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகளை நோக்கி இராணுவத்தினர் ஆட்லறி எறிகணை வீச்சுத்தாக்குதல்களை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

முன்னதாக நேற்றுக் காலை விமானப் படையின் கிபீர் ஜெட் விமானங்கள் பளை பிரதேசம், பச்சிலைப்பள்ளி கிராமத்தின் மீது 9 குண்டுகளை வீசியதாகவும் இதில் பல வீடுகள் சேதமடைந்ததாகவும் கூறப்பட்டது.

நாகர்கோயில் பகுதியில் இரு தரப்புக்கும் இடையே தொடர்ந்து மோட்டார் மற்றும் துப்பாக்கிச் சூடு நடைபெற்று வருவதாக கிளிநொச்சிச் செய்திகள் தெரிவித்தன.

விடுதலைப்புலிகளின் பிரதேசங்களை நோக்கி நேற்று முன்தினம் மாலை 5 மணி முதல் நேற்று காலை 11 மணிவரை தொடர்ச்சியான தாக்குதல்களை இராணுவத்தினர் மேற்கொண்டு வருவதாக கூறப்பட்டது. (எ-1)

## இந்திய அரசியல் தலைவர்களுடன் தமிழ்க்கூட்டமைப்பினர் சந்திப்பு

(புதுடில்லி)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நேற்று மாலை இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எல்.கே.நாராயணனை சந்தித்துப் பேசியுள்ளனர்.

சுமார் ஒரு மணிநேரம் நடைபெற்ற இப் பேச்சுவார்த்தையின்போது இலங்கையின் தற்போதைய நிலை குறித்தும் இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற மோதலையடுத்து பொதுமக்கள் அதிகமானோர் இடம் பெயர்ந்துள்ளமை குறித்தும் கூட்டமைப்பினர் விளக்கியுள்ளனர்.

இலங்கையில் அரசியல் தீர்வுகாண இந்தியா உதவவேண்டுமெனவும் எல்.கே.நாராயணனை தமிழ்க்கூட்டமைப்பினர் கேட்டுள்ளனர்.

இதேவேளை நேற்று இந்தியப் பிரதமரைச் சந்திக்க முடியுமென எதிர்பார்க்கப்பட்டிருந்த போதும் அவர்கள் இன்று மன்மோகன் சிங்கை சந்திப்பதற்கு வாய்ப்பிருப்பதாகவும் கூறப்பட்டது.

இதேவேளை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினரையும் நேற்று (04 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரூடாக 33 பேர் நெடுந்தீவுக்கு வருகை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மக்கள் மன்னாரில் இருந்து நெடுந்தீவுக்குச் சென்று அங்கிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ளனர். இவ்வாறு நேற்று 33 பேர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

கடந்த மாதம் 11 ஆம் திகதிக்குப் பின் யாழ்ப்பாணம் வரமுடியாது வவுனியாவில் தங்கியிருந்தவர்களே இவ்வாறு யாழ்பாணம் வந்துள்ளனர். (04 ஆம் பக்கம் பார்க்க)

## வல்வெட்டித்துறையில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறையில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கதிர்காமலிங்கம் அமிர்தலிங்கம் (வயது 54) என்ற குடும்பஸ்தரே (04 ஆம் பக்கம் பார்க்க)

## காலையில் கடத்தப்பட்ட மூவர் மாலையில் சடலமாக மீட்பு!

### விளான் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

இளவாலைப் பகுதியில் இருந்து நேற்றுக் காலை கடத்தப்பட்ட மூவர் சூட்டுக்காயங்களுடன் விளான் பகுதியில் நேற்று மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

தாடிவளை இளவாலையைச் சேர்ந்தவர்களான செல்லத்துரை காத்தீஸ்வரன் (வயது 36), பேரம்பலம் லவக்குமார் (வயது 27), மற்றும் இளவாலை வடக்கைச் சேர்ந்த ஐயாத்துரை குமாரகுல (04 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

கொழும்பு பழைய சோனக தெருவில் முஸ்லிம் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கொழும்பைச் சேர்ந்த லொறிச் சாரதியான மொகம்மட் நிஜாம் (வயது 38) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

அவர் தனது லொறிக்கு அருகில் நின்றிருந்த வேளை அங்கு வந்த இனந்தெரியாத ஒருவர் அவரைச் சுட்டுவிட்டு தப்பிச்சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## தபால் ஊழியர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை தபால் நிலையத்தில் கடமைபுரியும் ஊழியர் ஒருவர் நேற்றுக் காலை 7.45 மணியளவில் இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

காரைநகர் வீதி சங்கானைப் பகுதியில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. தொல்புரத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையாரான நடராசா தவராசா (வயது 39) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இச் சம்பவம் இடம் பெற்றபோது அப் பகுதியில் வர்த்தக நிலையங்கள் மூடிவிட்டு சந்தை வியாபாரிகள் தமது வியாபார பொருட்களினை அவ் (04 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர்களின் கல்வியை சிதைக்க ஊடகங்கள் துணை போகின்றன

### 512ஆவது பிரிகேட் படைப்பிரிவு எச்சரிக்கை

மாணவர்களின் கல்விச் செயற்பாட்டை சீர்குலைக்கும் நடவடிக்கையில் ஊடகங்களை ஈடுபட வேண்டாம் என 512வது பிரிகேட் படைப்பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

நேற்று யாழ்.ஊடகங்கள் ஆசிரியர் பீடத்தினர் 512-வது பிரிகேட் தலைமையலுவலகத்திற்கு அழைக்கப்பட்டு இவ் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் மாணவர்களின் கல்வியை சிதைப்பதற்கு ஊடகங்கள் துணை போகின்றன. இதனால் மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தைத் தவிர ஏனைய மாவட்டங்களில் கல்விச் செயற்பாடுகள் வழமைபோன்று செயற்படுகின்றன. எனவே யாழ்.ஊடகங்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மாணவர்கள் பாடசாலைக்குச் சென்று கல்வியைத் தொடர்வதற்கு தாங்கள் நூறுவீத பாதுகாப்பு உத்தரவாதம் வழங்குவதாகவும் இராணுவத் தரப்புத் தெரிவித்துள்ளது. (எ)

## வாழைச்சேனையில் இளைஞன் சுட்டுக்கொலை

வாழைச்சேனையில் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பிரதேசமான வாகரை வெள்ளையடிமடுவிலிருந்து இடம்பெயர்ந்து வந்த மயில்வாகனம் கோகுலன் (வயது 23) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவர் என தெரிவிக்கப்பட்டது.

வாழைச்சேனை கண்ணன் கிராமத்தில் உள்ள தனது உறவினர் வீட்டில் தங்கியிருந்த போது புதன்கிழமை இரவு 8.35 மணியளவில் முகமூடி அணிந்த ஆயுதக்குழுவினர் அவரை கடத்திச் சென்றுள்ளனர்.

இதன் பின்னர் (04 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணைவேந்தரின் முயற்சியால் மாணவர்களுக்கு உணவுப் பொருள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் வெளிமாவட்ட மாணவர்களுக்கு உணவு உட்பட அத்தியாவசியப் பொருட்கள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது.

யாழ்.பல்கலைக்கழக பதில் துணைவேந்தரின் முயற்சியின் பலனாக அரச அதிபரால் இவ்வுணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

இதுவரை இவ் உதவிகளைப் பெற்றுக் கொள்ளாத மாணவர்கள் தமது பீட மாணவ ஒன்றியத்துடன் தொடர்பு கொண்டு அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

கடந்த மாதம் 11 ஆம் திகதிமுதல் இடம்பெற்று வரும் அசாதாரண சூழ்நிலையால் யாழ்.பல்கலைக்கழக வெளிமாவட்ட மாணவர்கள் பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-1)

## பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கன்னாதிட்டிக் கிளையில் திருட்டு

யாழ்.கன்னாதிட்டி வீதியில் அமைந்துள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை உடைக்கப்பட்டு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்த மக்களுக்கான உலர் உணவுப் பொருட்கள் விநியோகிப்பதற்கான மா, சீனி, அரிசி மற்றும் பருப்பு வகைகள் நேற்று முன்தினம் யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் கிளைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த நிலையில் அன்றிரவு அப் பொருட்கள் கொள்ளையிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக யாழ்.பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் இக் கிளையினை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-133)

## மூன்று வாரங்களுக்குத் தேவையான பொருட்களே கையிருப்பில் உள்ளன

### யாழ்.அரச அதிபர் அறிவிப்பு

யாழ்.மாவட்டத்தில் மூன்று வாரங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களே கையிருப்பிலிருப்பதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

மோர்க்ஸ் றுகுணு-II கப்பல் மூலம் 3 ஆயிரத்து 624 மெற்றிக்தொன் பொருட்களும் மோர்க்ஸ் ஹின்ட் கப்பல் மூலம் 900 மெற்றிக்தொன் பொருட்களும் லிவர்கூல் கப்பல் மூலம் ஆயிரத்து 875 மெற்றிக்தொன்னுமாக 5 ஆயிரத்து 399 மெற்றிக்தொன் பொருட்களே வந்துள்ளன.

இவற்றில் அரிசி, சீனி, மா மற்றும் பால் மா என்பன அடங்குகின்றன. இந்த உணவுப் பொருட்கள் மூன்று வாரத்துக்கே போதுமானது. எனினும் சில ஊடகங்களில் யாழ். மாவட்டத்திற்கு மூன்று மாதங்களுக்குப் போதுமான உணவுப் பொருட்கள் இருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இது தவறாகும்.மேற்குறிப்பிட்ட மூன்று கப்பலிகளிலிருந்தும் யாழ்.மாவட்டத்திற்கு பெற்றுக் கொள்ளப்படவிருக்கின்ற உணவுப்பொருட்கள் மூன்று வாரங்களுகே போதுமானது என்பதே சரியானது என்பதை அறியத்தருகின்றேன்என அரச அதிபர் அறிவித்துள்ளார்.(ச)

## செய்முறைப் பரீட்சை நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய யாழ்.மாவட்ட மாணவர்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் நாளை நடைபெறவுள்ளது.

சங்கீதம், நடனம், மனைப்பொருளியல் ஆகிய பாடங்களுக்கே செய்முறைப் பரீட்சைகள் ஆரம்பமாகின்றன.

இப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களை தமது செய்முறைப் பரீட்சை நிலையங்களுக்கு உரிய நேரத்திற்குச் செல்லுமாறு யாழ்.கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. கடந்த மாதம் 11 ஆம் திகதி இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலை காரணமாக செய்முறைப் பரீட்சைகளை நடத்த முடியாத சூழ்நிலை காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது(ச-133)

## இரண்டாம் கட்டமாக மண்ணெய் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளின் ஊடாக இரண்டாவது தடவையாக பங்கீட்டு அட்டைக்கு ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்படுவதாக பல நோக்குக் கூட்டுறவுச்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏற்கனவே ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-133)

## செங்குந்தாவில் கணனி திருட்டு

(யாழ்ப்பாணம்)

செங்குந்தா இந்துக் கல்லூரியில் கடந்த 18 ஆம் திகதி இரவு பாடசாலை கணனி அறையிலிருந்த கணனியும் இரண்டு மொனிற்றர் உட்பட 60 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

ஊரடங்கு வேளையில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் குறித்து கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-136)

## பாகிஸ்தான் இராணுவ உதவியால்தான் பேச்சுக்களிலிருந்து அரசு விலகுகிறது

### இந்தியா சுட்டிக்காட்டு

பாகிஸ்தான் இராணுவ உதவியால்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பான அமைதிப் பேச்சுக்களிலிருந்து இலங்கை விலகிச் செல்கிறது என்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் தெரிவிப்பதாக ஏசியா ரைம்ஸ் ஒன்லைஸ்ன் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே யுத்தம் நடைபெற்று வரும் நிலையில் இலங்கையின் உள் நாட்டுப் போர்தொடர்பாக பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையே வார்த்தை யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

கொழும்பில் தனது தூதரக அதிகாரியை கொல்ல இந்திய உளவு நிறுவனம் முயற்சித்ததாக பாகிஸ்தான் குற்றஞ்சாட்டி வரும் நிலையில் தமிழர் பிரதேசங்கள் மீதான விமானக் குண்டு வீச்சில் பாகிஸ்தானின் பங்களிப்பு குறித்து இந்திய ஆய்வாளர்கள் கவனம் எடுக்கின்றனர்.

இலங்கை அரசாங்கமானது பாகிஸ்தான் உள்ளிட்ட எந்தவொரு நாட்டிலிருந்தும் ஆயுதக் கொள்வனவு செய்வதில்இந்தியாவுக்கு எதுவித பிரச்சினையும்இல்லை. அது இலங்கை நாட்டவர்களுக்கானது.

ஆனால் புதுடில்லியின் கவலை என்னவெனில் பாகிஸ்தானுக்கும் இலங்கைக்குமான உறவு ஆழமாக வளர்ச்சியடைந்து வரும் நிலையில் இலங்கை அரசாங்கமானது மேலும் மேலும் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கானபேச்சுக்களிலிருந்து விலகிச் செல்கிறது என்றார்.

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்குமான பாதுகாப்பு உறவானது நீண்ட காலமாக இருப்பினும் அண்மைக்காலமாக குறிப்பிடும்படியாக அதிகரித்துள்ளது.

இலங்கைக்கு பாரியளவில் ஆயுதங்களை ஆயுதக் கொள்வனவு செய்யும் நாடுகளில்பாகிஸ்தானும்ஒன்றாகவுள்ளது. ஜேனஸ் டிபென்ஸ் வீக்லி அறிக்கையின்படி 60 மில்லியன் டொலர் மதிப்பிலான ஆயுதக் கொள்வனவுக்குரிய பட்டியலை பாகிஸ்தானிடம் இலங்கை கொடுத்திருந்தது.

இலங்கை விமானப் படைக்குரிய தளபாடங்கள் மதிப்பு மட்டும் 38.1 மில்லியன் டொலர் ஆகும். அண்மைய ஸ்ட்ராட்பொர் அறிக்கையின்படி இலங்கைக்கு 110 மில்லியன் டொலர் மதிப்பிலான 22 அல்-ஹாலித் டாங்கிகளை பாகிஸ்தான் வழங்கியுள்ளது.

நான்கு அல்லது ஐந்து பாகிஸ்தான் விமானப் படையினர் உட்பட 12 முதல் 15 வரையான பாகிஸ்தானிய இராணுவத்தினர் கொழும்பில் முகாமிட்டு இலங்கை இராணுவத்தினருக்கு வழிகாட்டுகின்றனர் என்று இந்திய றோவின் முன்னாள் அதிகாரி கே. ராமன் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)

## கண்ணி வெடி அகற்றலுக்காக யப்பான் 143 மில்லியன் உதவி

வடக்கு-கிழக்கில் கண்ணி வெடி அகற்றுவதற்கு மேலும் ரூ143 மில்லியன் நிதி உதவியை யப்பான் வழங்குகிறது.

டெனிஸ் கண்ணி வெடி அகற்றும்நிறுவனம் மற்றும் ஹலோ டிரஸ்ட் நிறுவனத்தின் ஊடாக இந்த நிதி உதவி வழங்கப்படுகிறது.

இது தொடர்பிலான ஒப்பந்தத்தில் இலங்கைக்கான யப்பானியத் தூதுவர் கியோசி அர்காய் மற்றும் இரு டெனிஸ் ,ஹலோ டிரஸ்ட் நிறுவனப் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் கைச்சாத்திட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கில் 50 வீதமான பிரதேசத்தில் கண்ணி வெடி அகற்றும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு 30 வீதப் பிரதேசம் மீள் அமைப்புப் பணிகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கண்ணி வெடிகளில் சிக்கி உயிரிழப்போரின் மாதாந்த எண்ணிக்கை 15 இல் இருந்து 2 ஆகக் குறைந்துள்ளது என்று இலங்கைத் தேசக் கட்டமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

மொத்தம் 730 கிராமங்களில் கண்ணி வெடிகள் இருப்பதாக அடையாளப்படுத்தப்பட்டு 230கிராமங்களில் அகற்றப்பட்டு அரச அதிபர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

200 கிராமங்களில் கண்ணி வெடிகள் அகற்றும் பணி நடைபெறுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## க.கா.குழுத் தலைவருடன் ரவூப் ஹக்கீம் சந்திப்பு



(கொழும்பு)

அம்பாறையில் முஸ்லிம்கள் படுகொலை தொடர்பில் சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்பதை இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஜோகன் சொல்வ்பொர்க் மற்றும் நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோருடன் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் வலியுறுத்தினார்.

இது தொடர்பாக சந்திப்பு கொழுப்பில் நடைபெற்றது. சர்வதேச தடவியல் வல்லுநர்கள் விசாரணை தொடர்பிலான தமது கோரிக்கையிலிருந்து சிறிதும் விட்டுக் கொடுக்க மாட்டோம் என்று பிரட்ஸ்கரிடமும் சொவ்ல் பொர்க்கிடமும் ரவூப் ஹக்கீம் வலியுறுத்தியுள்ளார்.சிறப்பு அதிரடிப் படையினரால் இக் கொடிய காட்டு மிராண்டித்தனமான படுகொலை நிகழ்த்தப்பட்டிருப்பதாக அப்பகுதி மக்கள் தொடர்ந்து கூறிவருவதையும் அதனைத் தொடர்ந்துநடைபெறும் நிகழ்வுகளையும் அவர்களுக்குச் சுட்டிக்காட்டியதாக ஹக்கீம் கூறினார். (ச-5)




மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற சமாதானப் பேரணியைப் படத்தில் காணலாம்.

## ஆட்கடத்தல்கள் தொடர்வதால் கொழும்பில் தமிழ் மக்கள் அச்சம்

இலங்கையின் தலைநகர் கொழும்பில் அண்மைக்காலமாக இடம்பெறும் ஆட்கடத்தல்கள் அங்கு பொதுமக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளன.

கடந்த இரு மாதங்களில் சுமார் 50ற்கும் அதிகமானோர் கடத்தப்பட்டுள்ளதாகவும் அவர்களில் கடத்தப்பட்ட [illegible] பேரது குடும்பங்கள் தம்மிடம் இது குறித்து முறைப்பாடு செய்துள்ளதாகவும் மனித உரிமை ஆணையகம் தெரிவித்துள்ளது.

இந்தக் கடத்தல்கள் தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் அச்சம் காரணமாக தம்மிடம் புகார் கூற முன்வருவதில்லை என்று அரசாங்கத் தரப்பில் கூறப்படுகின்றது (எ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாட்டில் அறிவிருக்க வேண்டிய இடத்தில் அதிகாரம் அமரத் தொடங்கினால் அதன்பிறகு அது முன்னால் வந்து அந்த நாட்டை படுகுழிக்குள் இழுத்துச் சென்று விடும். -இங்கர்சால்

வலம்புரி

## இந்தியா தனது பரிபூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்

இலங்கை இன விவகாரத்தில் இந்தியாவின் தலையீடு தவிர்க்க முடியாதது. எனினும் இந்தியா இலங்கையின் யுத்தநடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக தெரிகிறதேயன்றி, சமாதானத்தை வலியுறுத்துவதாகத் தெரியவில்லை.

'பயங்கரவாதம்' என்ற பதத்தை எல்லா அமைப்புகளுக்கும் பொருத்திப் பார்க்கும் அநாகரியத் தன்மையினாலேயே இன்று உலகம் முழுவதும் போர்ச் சூழல் ஏற்பட்டுள்ளது.

அணுவாயுதவுற்பத்தி, ஈராக் மீதான தாக்குதல் இவையனைத்தும் பயங்கரவாதம் அல்ல என்ற முடிபை வல்லரசு என்ற வகையால் அமெரிக்கா நியாயப்படுத்துகிறது.

அதேநேரம் இலங்கையில் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுவதற்காக ஆயுத உத்விகளை வழங்க அமெரிக்கா தயாராகவிருப்பதாக அறிவித்துள்ளது.

இந்த அறிவித்தல் இந்துமா சமுத்திரத்தின் ஸ்திர நிலையைக் குழப்பும் சதி என்பதை இந்தியா உணர்ந்துகொள்ள வேண்டும்.

இந்திய மத்தியரசு தனது தார்மீகப் பொறுப்பைச் சரியான முறையில் மேற்கொண்டிருந்தால் அமெரிக்காவின் தலையீடு-ஆதிக்கம் இலங்கையில் அரசியல் எல்லைக்குள் வியாபகம் பெற்றிருக்க மாட்டாது.

இலங்கை அரசுகளைப்பொறுத்தவரை அவை இந்தியாவுக்குத் தலையையும் அமெரிக்காவுக்கு வாலையும் காட்டி தமிழர்களின் உரிமையை நசுக்கி விட்டால் போதுமென நினைக்கிறது.

பல்லின மக்கள் வாழும் இந்திய நாட்டின் தொழில்நுட்ப முன்னேற்றம், விஞ்ஞான வளர்ச்சி என்பவற்றை நிதர்சனமாக கண்டிருந்தும் இலங்கை ஆட்சியாளர்கள் இனங்களுக்குகிடையேயான ஒற்றுமையை நிலைநிறுத்துவதில் அக்கறை கொள்ளவில்லை.

இந்த அறியாமையைப் பயன்படுத்தி இலங்கையில் நிரந்தரம் போர்ச்சூழலை உருவாக்கி அதன் ஊடாக இந்திய உபகண்டத்திற்கு உபத்திரவம் கொடுப்பதே அமெரிக்காவின் இலக்கு.

இதனை புரிந்து கொள்ள இந்திய மத்தி அரசும் அதன் புலனாய்வுத் துறையும் மறந்து இலங்கை அரசுக்கு ஆயுத, இராணுவ உதவிகளை வழங்குவதிலேயே கரிசனை காட்டுகின்றன. இதற்குத் தமிழகத்தின் ஆட்சியாளர்களும் காரணம் எனலாம்.

அதாவது கலைஞர் கருணாநிதி, செல்வி ஜெயலலிதா, வை.கோபாலசாமி போன்ற முத்தரப்புப் போருக்குள் ஈழத் தமிழர் பிரச்சினை சிக்குண்டு அங்குமிங்கும் தள்ளாடுகின்றது.

ஈழத் தமிழர் விடயத்தை அரசியல் பேதம் கடந்து பார்க்கும் பக்குவம் மேற்குறிப்பிட்ட மூன்று தலைவர்களுக்கும் ஏற்படவில்லை.

இதனாலேயே ஈழத் தமிழர்களின் விடயத்தில் இலங்கை அரசு மெத்தனப் போக்கைக் கடைப்பிடிக்கின்றது.

எனவே ஈழத் தமிழர் விடயத்தில் தமிழக அரசும் மத்திய அரசும் பொது நோக்கில் தலையிட்டாக வேண்டும். இது காலத்தில் கட்டாயமாகும்.

# வட பிராந்தியப் போக்குவரத்துச் சபைக்கு 3 நாளுக்குத் தேவையான டீசல் விநியோகம்

மூன்று நாட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட சேவையை மேற்கொள்வதற்காக வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்கு 6 ஆயிரத்து 600 லீற்றர் டீசல் வழங்கப்பட்டுள்ளது.

டீசல் கையிருப்பில் இல்லாத நிலையில் போக்குவரத்துச் சபையின் சேவைகள் அனைத்தும் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தன. இதனால் அரச உத்தியோகஸ்தர்கள் மற்றும் பயணிகள் பெரும் கஷ்டங்களை எதிர் கொண்டனர்.

இந்நிலையில் கடன் மீளச்செலுத்தப்படாத நிலையில் சேவையைத்தொடர்ந்து மேற்கொள்வதற்காக டீசல் வழங்கப்பட்டதாகப் பெற்றோலியக் கூட்டுஸ்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று நண்பகல் டீசல் கிடைக்கப்பெற்றதையடுத்து பிற்பகலில் தமது சேவையை ஆரம்பித்துள்ளதாக யாழ்.மத்திய போக்குவரத்து சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

தொடர்ந்தும் தமக்கு தேவையான டீசல் வழங்குமிடத்து சேவையைத் தொடர்ந்து மேற்கொள்ளமுடியும் எனவும் போக்குவரத்துச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன. இதே வேளை பஸ் சேவை மேற்கொள்ளப்படாத இடங்களுக்கான தபால் பொதிகளை அனுப்புவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-133)

# அரசுக்கு இணையான சமதரப்பு புலிகளுக்கு வழங்கக் கூடாது

## ஜனாதிபதி நோர்வேயிடம் வலியுறுத்தல்

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சமதரப்பு நிலையை அளிக்கக் கூடாது என்று நோர்வேயிடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நா. ஆண்டுக் கூட்டத்தில் பங்கேற்க நியூயோர்க் சென்றுள்ள மகிந்த ராஜபக்ஷ அங்கு நோர்வே பிரதமர் ஜென்ஸ் ஸ்டொல்டன்பெர்க்கை சந்தித்துப் பேசினார்.

இதன்போது அவர் நோர்வேப் பிரதமரிடம் தெரிவித்துள்ளதாவது,

நோர்வே மற்றும் அரசாங்கத்துக்கிடையான இருதரப்பு உறவு மேம்படுத்தப்பட வேண்டும். அந்த இருதரப்பு உறவானது இரு இறைமையுள்ள அரசுகளுக்கு இடையேயானது. இந்த நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு நோர்வே அரசாங்கமானது அரசாங்கத்துக்கு இணையான சமதரப்புத் தகுதி நிலையை அளிக்கக் கூடாது.

அமைதி முயற்சிகளில்நோர்வேயின் பங்களிப்புத் தொடர்பில் எதுவித கட்டுப்பாடும் அரசாங்கத்தினால் விதிக்கப்பட மாட்டாது. அமைதிப் பேச்சுக்களில் தமிழீழத் தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் நேரடியாக ஈடுபட வேண்டும். விடுதலைப்புலிகளின் அச்சுறுத்தலை முறியடிக்கும் வகையில் அண்மையில் இராணுவம் நடவடிக்கை மேற்கொண்டது.

தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பேச்சுமேடைக்குத்திரும்பத் தயாராகவிருந்தால் அரசாங்கமானது பேச்சுகளுக்கு தயாராகவிருக்கிறது.

ஒஸ்லோவில் சிறிலங்க அரசாங்கக் குழுவினரை சந்தித்துப் பேச தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மறுத்துவிட்டார். அதே போன்ற சூழ்நிலை இனிஏற்படக் கூடாது.



மூதூர் அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்கள் 17 பேர் படுகொலையில் சிறிலங்கா அரசாங்கம் மீது இலங்கைப் போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுத் தலைவராக இருந்த உல்ப் ஹென்றிக்சன் குற்றஞ்சாட்டியிருந்தமை கவலையளிக்கக் கூடியது என்று நோர்வேப் பிரதமரிடம் மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

அச் சந்திப்பின்போது சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க, வெளிவிவகார அமைச்சுச் செயலாளர் பாலித் ககார ஆகியோர் உடன் இருந்தனர். (எ-5)

# ஈழத் தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்க 6 கோடி தமிழர்கள் சென்னையில் உள்ளனர்

## வை.கோ. தெரிவிப்பு



(சென்னை)

ஈழத் தமிழர்களுக்குப் பாதிப்புஎன்றால்அதனைத் தட்டிக் கேட்க ஆறு கோடி தமிழர்கள் இருக்கிறார்கள். எந்தப் பாதிப்பு வந்தாலும் ஈழத் தமிழர்களை ஆதரிப்போம். அவர்களுக்கு ஒன்று என்றால் அதைத் தட்டிக் கேட்பதற்கு ஆள் இல்லை என்று நினைக்க வேண்டாம் என்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வை.கோ. தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் ஈழத்தில் தமிழ் குழந்தைகள் படுபயங்கரமாக கொல்லப்பட்டபோதுஅதைக் கண்டித்து டில்லியில் இலங்கைத் தூதுரகம் முன் எழுச்சியான ஆர்ப்பாட்டம் செய்து ஆறு கோடி தமிழர்களின் உணர்வுகளை பிரதிபலித்தோம்.

ஆனால் எங்களின் ஈழத் தமிழர் ஆதரவை விளம்பரம் என்கிறார் கருணாநிதி. ஆயிரம் கருணாநிதி வந்தாலும் ம.தி.மு.கவை ஒன்றும் செய்யமுடியாது.

நான் வவுனியா சென்று வந்ததைக் கூட கிண்டல் செய்தார். என் கடிதத்தை தணிக்கை செய்து சட்டசபையில் படித்தார். அவர் தணிக்கை செய்த பகுதியைக் கூறுகிறேன். சிங்கள இராணுவத்தின் கைகளில் சிக்கிப் பிடிபட நேர்ந்தால் தி.மு.க. அரசுக்கோ மத்திய அரசுக்கோ சேதாரம் ஏற்படாமல் என்னை நான் பலி இட்டுக் கொள்வேன் என்ற நான்கு வரியை நீக்கிவிட்டார். அந்த வரியை சட்டசபையில்படித்தால் என் மீது அனுதாபம் ஏற்படும் என்று பயந்து அப்படி செய்துள்ளார்.

எந்தப் பாதிப்பு வந்தாலும் ஈழத் தமிழரைஆதரிப்போம். வருகின்ற உள்ளூராட்சித் தேர்தலில் செயல் வீரர்கள் நன்கு செயற்பட்டு கழகத்திற்கு வெற்றியைத் தேடித் தர வேண்டும் என்றார் வை.கோ. (ச-5)

# வாய்மொழிப் பரீட்சைக்கு புதிய திகதி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் தேர்ச்சி பெற்றுள்ள அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்துவதற்கான வாய்மொழிப் பரீட்சைக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் 21 மற்றும் 23 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்து தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாக நடைபெறாது போன மேற்படி வாய்மொழிப் பரீட்சை எதிர்வரும் 27 ஆம் 28 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

ஓகஸ்ட் 21 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு எதிர்வரும் 27 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கும் அதேநாள் பிற்பகல் 2 மணிக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு முற்பகல் 11 மணிக்கும் நடைபெறும்.

ஓகஸ்ட் 23 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு 28 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு நடைபெறும். [illegible] அறிவித்துள்ளார். (ச)

# தென்மராட்சிப் பகுதி சுகாதாரப் பணியாளர்களுக்கு

தென்மராட்சிப் பிரதேசத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்களும் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள வைத்திய நிறுவனங்களில் நிரந்தர கடமைபுரியும் வைத்திய நிறுவனமாகக் கொண்டவர்களும் எதிர்வரும் 25 ஆம் திகதியிலிருந்து தங்களின் நிரந்த பணி நிறுவனங்களில் பணியாற்றுமாறு யாழ்.சுகாதாரச் சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

தற்காலிகமாகப் பணிபுரிபவர்களை சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவர்கள் உடனடியாக விடுவிக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (எ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கான உள்ளூராட்சி தேர்தல் ஒத்திவைப்பு

(கொழும்பு)

வட-கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி தேர்தல் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி, ஓட்டமாவடி,ஏறாவூர் தவிர்ந்த பிரதேசசபைகளுக்கும் யாழ்ப்பாணம்,வவுனியா, மன்னார், முல்லைத்தீவு,கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தலே ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் ஜூன் மாதம் 30 ஆம் திகதிவரை இத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் நடைபெற வேண்டிய இந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் இம் மாதம் 30 ஆம் திகதி உள்ளூராட்சி தேர்தலை நடத்த முடியுமா? என்பது குறித்து தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்களுக்கு அண்மையில் தேர்தல் ஆணையாளர் பணிப்புரை விடுத்திருந்தார்.

இதற்கிணங்க தெரிவத்தாட்சி உத்தியோகஸ்தர்கள் அறிக்கைகளை அனுப்பிவைத்திருந்தனர். இந்த அறிக்கைகளை பரிசீலித்த பின்னரே தேர்தலை ஒத்திவைக்கும் முடிபினை தேர்தல் ஆணையாளர் எடுத்துள்ளார்.

இது குறித்து மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. இதற்கான வர்த்தமானி அறிவிப்பு விரைவில் வெளியிடப்படவுள்ளது.(ச)

## இந்திய...

கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்தித்துள்ளனர். இச் சந்திப்பிலும் இலங்கை நிலைமை குறித்தும் தெளிவாக விளக்கியுள்ளனர்.

இந் நிலையில் அரசும் விடுதலைப்புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும் சமாதான பேச்சுக்களை மீண்டும் தொடங்க வேண்டுமென்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சுட்டிக் காட்டியுள்ளது. (ச)

## வல்வெட்டித்...

கொல்லப்பட்டவராவார்.

சம்பவ இடத்திற்கு நேரில் சென்று மரண விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறை நீதிவான் அரியநாயகம் சடலத்தை பிரேதபரிசோதனைக்குப் பின் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு வல்வெட்டித் துறை பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-52)

# மேலும் 62 அகதிகள் தமிழகம் சென்றனர்

(மன்னார்)

இலங்கையிலிருந்து மேலும் 62 பேர் அகதிகளாக நேற்று தமிழகம் சென்றடைந்துள்ளனர்.

அனைவரும் பேசாலை மற்றும் தலைமன்னாரைச் சேர்ந்தவர்கள் என இந்தியச் செய்திகள் தெரிவித்தன.

தமிழகம் சென்றவர்கள் விசாரணைக்குப் பின்னர் மண்டபம் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (ச)

## மன்னாருடாக...

வவுனியாவில் இருந்து மன்னாருக்குச் சென்ற அவர்கள் மன்னார் மீனவரின் உதவியுடன் நெடுந்தீவை வந்தடைந்தனர்.

அங்கிருந்து பொலிஸ் விசாரணையின் பின் அவர்கள் விடுவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு கடந்த வாரம் 12 பேர் யாழ்ப்பாணம் வந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## தபால்...

விடங்களில் விட்டு ஓடிச் சென்ற தாகவும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் நீதிபதி சறோஜினி இளங்கோவன் சடலத்தினை பிரேதபரிசோதனைக்காக யாழ்.வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு மானிப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-133)

# பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகும் வரை நிலைமைகளை கட்டுப்படுத்த வேண்டும்

## யாழ்.ஆயர் வேண்டுகோள்

ஒக்டோபர் மாதம் பேச்சுக்கள் ஆரம்பமாகும் வரை நிலைமைகள் மோசமடையாமலும் மனித உயிர்கள் மேலும் அநியாயமாக பறிக்கப்படாமலும் பார்த்துக்கொள்வது சமாதானத்தையும் நல்லெண்ணத்தையும் விரும்புபவர்களின் இன்றைய அரும்பணியாகும் என யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் தெரிவித்துள்ளார்.

தலைவர் பிரபாகரனுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

சிறிது கால அமைதியின் பின்னர் அண்மைகால நிகழ்வுகளால் மீண்டும் ஒரு கொடிய போரையும் பயங்கர பட்டினிச்சாவையும் எதிர்நோக்கும் அபாயத்தின் அதிர்ச்சியில் உறைந்து போயுள்ள தமிழ் மக்கள் வாழ்வில் இணைத்தலைமை நாடுகளின் பேச்சுவார்த்தைக்கான முயற்சி அமைதி பெருமூச்சை ஏற்படுத்தியுள்ளது.

போரையும் அதன் பன்முக வடிவங்களையும் கடந்த இரண்டு தசாப்தங்களாக அனுபவித்து இனி இந்த மண்ணில் போரே வேண்டாம் என்ற நிலைக்கு வந்துள்ள தமிழ் மக்கள் இன்னும் ஒரு போரைத் தாங்கும் மன சக்தி அற்றவர்கள்.

பாதுகாப்பான இடங்களையும் அன்றாட உணவுத் தேவைகளையும் நிறைவு செய்வதற்கு என்ன செய்வோம் என்ற அங்கலாய்ப்பிலும் அடுத்து என்ன நடக்குமோ என்ற ஏக்க உணர்விலும் இருந்த மக்கள் அமைதியான பாதுகாப்பான மகிழ்ச்சியான வாழ்வை தம் சொந்த வீடுகளில் வாழவே விரும்புவர்.

இணைத் தலைமை நாடுகள் நோர்வே அரசின் தலைமையில் கடந்த காலங்களில் ஆற்றிய அரும் பணியை நன்றியோடு பாராட்டுவதோடு இப்போதும் ஒரு இக்கட்டான நேரத்தில் இரு பகுதியினருக்கும் நெருக்கடி கொடுத்து நிபந்தனைகள் அற்ற பேச்சுக்களுக்கு அழைத்திருப்பது அவர்களின் செயற்திறனைக் காட்டுகின்றது என ஆயரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# ஊழியர்களின் 15 சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்டன

(கொழும்பு)

திருகோணமலையில் கடந்த ஆகஸ்ட் மாத முற்பகுதியில் மூதூர் நகரப் பகுதியில் உள்ள பிரெஞ்சு தன்னார்வத் தொண்டு நிறுவனமான அக்ஸன் எகெயின்ஸ்ற் ஹங்கர் நிறுவனத்தின் உள்ளூர் பணியாளர்கள் 17 பேர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக கொல்லப்பட்ட பதினைந்து பேரின் சடலங்களை இரசாயனப் பரிசோதனைக்கென தோண்டி எடுப்பதற்கு அநுராதபுரம் நீதிவான் குற்றப்புலனாய்வுத்துறையினருக்கு அனுமதி வழங்கியுள்ளார்.

ஏற்கனவே கடந்த 16 ஆம் திகதியன்று நீதிமன்ற அனுமதியின் பேரில் இவ்வாறு கொல்லப்பட்ட இரண்டு பணியாளர்களின் சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்டு கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்த பிரெஞ்சு நிறுவனம் தாம் திருகோணமலை மாவட்டத்தில் மேற்கொண்டு வந்த நிவாரணப் பணிகளை இந்தக் கொலைச் சம்பவத்தைத் தொடர்ந்து கைவிடுவதாக ஏற்கனவே அறிவித்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் நான்காம் திகதி கந்தளாய் நீதிமன்றத்தில் இடம் பெறும் எனவும் அநுராதபுரம் நீதிவான் அறிவித்துள்ளார்.

கொழும்பில் இடம் பெறும் சடலங்கள் மீதான இரசாயனப் பரிசோதனையின் போது அவுஸ்திரேலிய நிபுணர்கள் பார்வையாளர்களாக கலந்து கொள்வர் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (ச)

## வாழைச்...

வாழைச்சேனை சௌந்தரநாயகம் வீதியில் நேற்றுக் காலை 6 மணியளவில் மயில்வாகனம் கோகுலனின் சடலம் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் காணப்பட்டுள்ளது. (எ)

## காலையில் கடத்தப்பட்ட...

சிங்கம் (வயது 46) ஆகிய மூவருமே நேற்று பிற்பகல் சடலமாக மீட் கப்பட்டவர்களாவர்.

நேற்றுக் காலை வியாபாரத்திற்காக சந்தைக்குச் சென்ற இவர்களை காணவில்லை என மதியம் இளவாலை பொலிஸ் நிலையத்தில் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டதாகவும்;

எனினும் பிற்பகல் மூவரும் விளானில் சூட்டுக்காயத்துடன் சடலமாக மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றிரவு சம்பவ இடத்திற்குச் சென்று மரண விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் நீதிபதி சரோஜினி இளங்கோவன் சடலங்களை தெல்லிப்பழை வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு அப்பகுதி கிராமசேவையாளருக்கு உத்தரவிட்டார். இச் சம்பவத்தினையடுத்து அப் பகுதியில் பதற்றம் நிலவுகின்றது. (ச-5)

# இந்திய அரசுடன் பேசுவது...

அவர் அளித்த நேர்காணல் வருமாறு;

*கேள்வி:* கிளாலியிலும் முகமாலையிலும் சம்பூரிலும் புலிகள் பாரிய தோல்வியை சந்தித்துள்ளதாக அரசாங்கம் தொடர்ச்சியாகக்கூறி வருகிறது.இந்த மூன்று இடங்களிலும் கள நிலைமை என்ன?

*பதில்:* கிளாலி முகமாலைப் பகுதிகளில் இராணுவம் தன்னுடைய நிலைகளில் இருந்து 400 -500 மீற்றருக்கு இடைப்பட்ட யுத்த நிறுத்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சூனியப் பிரதேசத்தினை கைப்பற்றியுள்ளது.

யுத்த நிறுத்த உடன்பாட்டின் அடிப்படையில் இந்த சூனியப்பிரதேசத்திற்குள் எவரும் நகர முடியாது. ஆனால் இராணுவத்தினர் இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எமது காவலரண் பகுதிக்குள் ஊடுருவி நிலை கொண்டிருக்கிறார்கள்.

இதனை முற்று முழுதாக யுத்த நிறுத்த உடன்படிக்கை மீறலாகவே பார்க்கின்றோம். அதேபோல் சம்பூர் பிரதேசத்தையும் ஊடுருவி இராணுவம் ஆக்கிரமித்துள்ளது.

எங்களைப் பொறுத்தவரையில் இதனை பாரிய பின்னடைவாக நாம் கருதவில்லை. ஏனெனில் உடன்படிக்கை ஒன்று அமுலில் இருக்கும் போது இப்படி நடந்துள்ளது.

இனிவரும் காலத்தில் அவர்களுடைய போர் நடவடிக்கை பிரகடனப்படுத்தப்படும் நிலையில் எமது அனைத்துப் பலங்களும் பிரயோகிக்கப்பட்டு இந் நிலங்கள் மீட்கப்பட்டு இராணுவத்திற்கு படுதோல்வி ஏற்படுத்தும் அளவிற்கு எம்மிடம் சக்தி உண்டு என்றார் தமிழ்ச்செல்வன்.

*கேள்வி:*சம்பூரில் இருந்து இராணுவம் வெளியேறாது விட்டால் உங்கள் நிலைப்பாடு என்ன?

*பதில்:* சம்பூர் மட்டுமல்ல; யுத்த நிறுத்த உடன்பாட்டுச் சூழலைப் பயன்படுத்தி இராணுவம் ஆக்கிரமித்துள்ள அனைத்துப் பகுதிகளையுமே விடுவிப்பதற்கான முயற்சிகளை எதிர்காலத்தில் நாங்கள் முன்னெடுப்போம்.

*கேள்வி:* ஏ-9 பாதை திறக்கப்பட்டால் சோதனைச் சாவடிகள் எந்த இடங்களில் வைக்கப்படும்?

*பதில்:* வழமை மாதிரியே சோதனைச்சாவடிகள் அந்தந்தப் பகுதிகளிலேயே நிலைப்படுத்தப்படும்.

வழமையான போக்குவரத்துப் போலவே மக்களுக்கான அத்தியாவசியப் பொருட்களின் போக்குவரத்துக்கள் நடைபெறும் என நினைக்கிறேன்.

*கேள்வி:* காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்குமிடையிலான கடற்பரப்பில் விடுதலைப்புலிகளின் அனுமதி இன்றி எந்தக் கப்பலாவது பயணம் செய்ய முடியுமா?

*பதில்:* இந்த கடற்பிராந்தியத்தில் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு உட்பட்ட பகுதிகள் எம்மிடமே இருக்கின்றது.

ஆனால் அவர்கள் சர்வதேச கடற்பரப்புக்கு ஊடாகவே இப்போது பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். கடலைப் பொறுத்த வரையில் காவல் வேலிகளை இட்டு எல்லைகளை பாதுகாப்பதென்பது கடினம்.

விடுதலைப்புலிகளின் அனுமதி இன்றி அத்துமீறி நுழையும் இலங்கை கடற்படைக் கப்பல்களை நாங்கள் தாக்கியழித்து வருகிறோம் என்றார்.

*கேள்வி:* யாழ்ப்பாணத்தில் புலிகளின் பகுதிக்குள் இராணுவம் நுழைந்து விட்டதாக அரசாங்கத்தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. இது எந்த அளவுக்கு உண்மை? இந்த பிரச்சினைக்கு முடிவு என்ன?

*பதில்:* இது தவறான செய்தியாகும். எமது பகுதிக்குள் 400-500 மீற்றர் வரையான பகுதிக்குள் தான் இராணுவம் ஊடுருவி நிற்கிறது யுத்த நிறுத்த உடன்பாட்டின் பிரகாரம் அப் பகுதியால் போக்குவரத்துக்கள் இடம் பெற்றுக் கொண்டிருந்த சமயமே இராணுவம் முன்னேறி அந்த பகுதியை கைப்பற்றி ஆக்கிரமித்து வைத்துக்கொண்டிருக்கிறது.

பொதுமக்கள் வாழ்ந்து கொண்டிருந்த எந்தப் பகுதிக்குள்ளும் இராணுவம் முன்னேற வில்லை.

*கேள்வி:* இலங்கை தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திப்பதனால் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றி கருத்துக்கூறுங்கள்?

இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வுகாண்தில்தமிழகம் மற்றும் இந்தியாவின் பங்கை எதிர்பார்க்கிறீர்களா?எதிர்பார்த்திருந்தால் எத்தகைய பங்களிப்பை அல்லது நிலைப்பாட்டை எதிர்பார்க்கிறீர்கள்?

தமிழீழத்தேசியத் தலைவருக்கு இந்தியா மீது எப்போதும் நம்பிக்கையிருந்தில்லை. இப்போது அந்த நிலைப்பாடு மாறியுள்ளதா?

*பதில்:* எங்களைப் பொறுத்தவரையில் இந்திய அரசுக்கு இங்குள்ள நிலைமைகளை எடுத்துரைப்பதென்பது எமது தார்மீகக்கடமை என்றே நினைக்கின்றோம்.

அயல் நாடு என்ற வகையிலும் பெருமளவில் எமது மக்கள் அங்கு வாழ்ந்து வருவதானாலும் இப்போதும் பெருமளவு மக்கள் அகதிகளாக அங்கு செல்வதினாலும் இந்திய அரசுக்கு இங்குள்ள யதார்த்தத்தை எடுத்துரைப்பது அவசியமானதாகும்.

அந்த வகையில் தமிழ்க்கூட்டமைப்பினர் தமிழ் நாட்டில் உள்ள தமிழகப் பிரமுகர்களைச் சந்தித்து இங்குள்ள நிலைமைகளை விளக்கியதுடன் இந்தியப் பிரதமரைச் சந்திப்பதற்கும் தயாராக இருக்கின்றார்கள்.

அந்த வகையில் இந்தியா உட்பட அனைத்து நாடுகளுமே எம்மை மனித நேயத்துடன் நோக்கி எமது போராட்டத்திற்கு தார்மீக ஆதரவைத் தரவேண்டும். அத்துடன் பெரும் இன அழிப்பில் ஈடுபடும் சிறிலங்கா அரசாங்கத்திற்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்கி ஊக்குவிக்காமல் எமது மக்களின் வாழ்வுரிமைப்போரை அங்கீகரித்து ஆதரிக்கவேண்டுமென்பதே எமது அவா.

*கேள்வி:* இலங்கை பிரச்சினைக்கு என்னதான் தீர்வு.

*பதில்:* இலங்கையைப் பொறுத்தவரை தமிழர்களின் தேசத்தை சிங்களவர்கள் ஆக்கிரமித்து வைத்திருக்கிறார்கள். இதில் இருந்து தமிழ் மக்கள் விடுபட்டு தங்களைத் தாங்களே ஆளக்கூடிய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒரு தீர்வை அடையக்கூடிய சூழல் உருவாகும் என்றபோதே இலங்கைத் தீவில் அமைதி பிறக்கும்.

சிங்கள அரசும் சிங்கள மக்களும் தமிழர்களை ஆக்கிரமிக்க வேண்டும்; தமிழர்களை இல்லாதொழிக்க வேண்டும் என எண்ணம் கொண்டு செயற்படுவார்களேயானால் ஒரு போதும் இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கப்போவதும்இல்லை; இந்தத் தீவு அமைதியடையப்போவதுமில்லை.

ஆகவே தமிழ் மக்களை சுதந்திரமாக சுயநிர்ணய அடிப்படையில் அரசமைத்து நிம்மதியாக வாழ விடுவார்களேயானால் அதுவே தீர்வுக்குச் சிறந்த வழியாகும். (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1 இரண்டாம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.09.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org